# தர்ம வாஹினி

☼

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா

☼

தமிழாக்கம்

Published by

Sri Sathya Sai Books and Publications Trust, Tamilnadu

Old No. 16/ New No.41, Ramakrishnan Street,

Perambur, Chennai-600011.

## அத்தியாயம் 1

மனிதன் அமைதியாக வாழ வேண்டுமானால், அவன் எப்பொழுதும் தன்னை அறச் செயலில் ஈடுபடுத்திக்கொள்ளுவதோடு தர்மத்துக்குத் தன்னையே அர்ப்பணித்துக்கொள்ளவும் வேண்டும். அப்பொழுதுதான் உலகமும் அமைதியை அநுபவிக்க முடியும். அறவழியில் அல்லாது வேறு எந்த வழியாலும் மன அமைதியையும் இறைவனின் அருளையும் பெற இயலாது. மனித குலத்தின் நன்மைக்குத் தர்மமே ஆதாரம். யுக யுகாந்திரமாக மாறாது இருந்து வரும் உண்மை இது. தர்மம் செயலிழந்து நிற்கும்போது மனிதகுலம் முழுமையும் வேதனை, பயம் ஆகியவைகளால் பீடிக்கப்படும்; புரட்சிப்புயலால் அலைக்களிக்கப்படும். தர்மத்தின் ஒளி மனித வாழ்வை ஒளிபெறச் செய்யாவிடில் மக்கள் துன்பம் என்னும் இருளால் சூழப்படுவர்.

தர்மமே உருவானவர் இறைவன். தர்மத்தின் மூலமாகத் தான் அவருடைய அருளைப் பெற முடியும். தர்மத்தை வளர்த்து, ஸ்தாபித்தவர் அவரே. அறமே இறைவன். வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவை தர்மத்தின் உயர்வைப் பறைசாற்றுகின்றன. எல்லா மதநூல்களுமே அதைப் பின்பற்றுபவர்களுக்குப் புரியும் மொழியில் தர்மத்தின் உயர்வைப் பற்றிப் பேசுகின்றன. தர்மமே உருவான தர்ம நாராயணனுக்குப் பயந்து, பணிந்து மரியாதை செலுத்த வேண்டியது ஒவ்வொருவரின் கடமையும் ஆகும். இது, எல்லா இடங்களிலும், எல்லா யுகங்களிலும் கையாளப்பட வேண்டிய கடமையாகும். அறமெனும் ஆற்றுப் பெருக்கு ஒரு நாளும் வற்றிப் போவதில்லை. அந்தக் குளிர்ந்த நீர்பெருக்கு வற்றுமானால், பயங்கரமான விளைவுகளினால் மனிதகுலம் துன்புற நேரும். சரஸ்வதி நதி புறக்கண்களுக்குப் புலப்படாமல், பூமிக்கு அடியில் பெருக்கெடுத்து ஓடி, தாவர இனங்களின் வேர்களுக்கு உணவளித்து, நீர்நிலைகளையும் நிரப்புவது போல, அறமென்னும் நீர்பெருக்கும் புறக்கண்களுக்குப் புலப்படாமலேயே மனித குலத்தை ஊட்டி வளர்க்கிறது. மனிதன் மட்டுமின்றிப் பறவைகளும், பிராணிகளும் கூடத் தர்மத்தை அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் எல்லா உயிரினங்களும் அமைதியோடு ஆனந்தமாக வாழ முடியும், எங்கும் மகிழ்ச்சி நிலவும்.

உலகம் எல்லா நிறைவுகளையும் பெற்று மகிழ வேண்டுமானால், தர்மம் பிரவாகம் எப்பொழுதும் தடையின்றிப் பொங்கிப் பெருகி ஓடிக்கொண்டு இருக்க வேண்டும். அறவழியின் முக்கியத்துவத்தை மறந்ததாலும், நேர்மையில் நம்பிக்கை குறைந்ததாலும், உலகமே இப்பொழுது துன்பத்தில் ஆழ்ந்து கிடக்கிறது.

தர்மத்தை பற்றி மனிதன் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தர்மம் என்றால் என்ன, தர்மத்தின் சாரம் என்ன, தர்மத்தின் வழியில் சென்றால் ஒரு சாதரண மனிதனின் வாழ்வில் அமைதி நிலவுமா என்ற சந்தேகங்கள் மனிதனுக்குத் தோன்றுவது இயற்கையே. இந்தச் சந்தேகங்களைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம் மட்டுமல்ல, அவசரத் தேவையாகும். தர்மம் என்ற சொல்லைக் கேட்டவுடன் ஒரு சாதாரண மனிதனுக்குத் தோன்றுவது என்ன தெரியுமா யாசிப்பவர்களுக்கு இல்லை யென்னாது தானம் வழங்குவதும், யாத்திரை செல்பவர்களுக்குத் தங்கிச்செல்ல வசதிகள் செய்து தருவதும், பரம்பரைத் தொழிலைப் பற்றி நிற்பதும், இயற்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்படுவதும், தன் இயல்பான பண்புகளைப் பின் பற்றுவதா, அன்றி மனத்தின் சபலங்களுக்கு உட்படுவதா என்று ஆராய்ந்து அவைகளில் நல்லது, கெட்டது எது என்று தீர்மானிப்பதும் ஆகிய அனைத்தையும் தர்மம் என்று எடுத்துக்கொள்ளுகிறான்.

வெகுநாட்களாகவே தர்மத்தின் உருவம் இனம் கண்டு கொள்ள இயலாத அளவுக்கு மாற்றப்பட்டுவிட்டது. நெடு நாட்களாகக் கவனிக்கப் படாவிட்டால், அழகான வயலும், தோப்பும், முள்ளும், செடியும், புதரும் மண்டி உருமாறிப் போய்விடும். ஓங்கி வளர்ந்த மரங்களை வெட்டி வீழ்த்தி விட்டால், இயற்கையின் தோற்றமே மாற்றமடைந்து விடுகிறது. காலப்போக்கில் இந்த மாறிய நிலையையே பார்த்துப் பழகி விட்ட மனிதன் அதனுடைய முந்தைய நிலையை, இப்போது நேர்ந்துள்ள அதன் வீழ்ச்சியைத் தெரிந்து கொள்ளவதில்லை. இன்று தர்மத்துக்கும் இந்த நிலை ஏற்பட்டுவிட்டது.

வேதங்களிலும், சாஸ்திரங்களிலும், புராணங்களிலும் விவரிக்கப்பட்டுள்ள தர்மத்தின் வரிவடிவத்தை ஒவ்வொரு மனிதனும்

தெரிந்து கொள்ள வேண்டும். அரைகுறை அறிவைக் கொண்டு தவறாகப் புரிந்து கொண்டவர்களாலும், கட்டுப்பாடற்ற மனநிலை படைத்தவர்களாலும், புனிதம் கெட்ட தர்க்கவாதிகளாலும் தர்மத்தின் உருவமே கெட்டு விட்டது. தெள்ளிய மழைநீர் பூமியை அடையும் போது தரையின் தரத்தைப் பொறுத்துக் களங்கப்பட்டு மாறுதல் அடைவது போல, தர்மமும் நிறம் கெட்டு நிற்கிறது. நம் முன்னோர்களான முனிவர்கள், ரிஷிகள் ஆகியவர்களின் மாசற்ற அறிவுரைகளும், பிற ரக்கு வழி காட்டிகளாக விளங்கும் அவர்களுடைய வாழ்க்கையும், அவர்களுடைய ஒவ்வொரு செயலையும் ஊக்குவித்த களங்கமற்ற மனோதர்மமும், பண்பற்ற தகுதியற்றவர்களின் கைகளில் அகப்பட்டு, தம் இயல்பான சிறப்பை இழந்து நிற்கின்றன.

சிறுவர் சிறுமியர்களின் பாடப்புத்தகங்களில் ஏராளமான விளக்கப்படங்கள் இருக்கும். குழந்தைகள் அந்தப் படங்கள் எதைத் தெளிவாக்குகின்றன என்பதை மறந்து, படங்களிலேயே மனத்தைப் பறிகொடுத்துக் காலத்தை வீணாக்குவார்கள். அதைப் போலவே, தர்மத்தைத் தெளிவுபடுத்துவதற்காக அமைக்கப்பட்ட ஆசார நியமங்களில் ஈடுபட்டு, அவைகள் போதிக்கும் உண்மைகளை மறந்து விடுகிறார்கள் மக்கள். பிரயாணைகள் வழியில் தங்கி இளைப்பாறுவதற்காகச் சத்திரங்கள் கட்டப்பட்டுள்ளன. அவைகளில் தங்கி ஓய்வெடுப்பவர்கள் அவர்களுக்கு நிழல் தந்து ஆதரித்த அந்தச் சத்திரங்களையே கவனக்குறைவாலோ அன்றி வேண்டுமென்றே பாழ்படுத்தி விடுவதைப் போல, அறிவிலிகளும், வக்ரபுத்தி படைத்தவர்களும் வேதங்கள் போதித்த நீதி நெறிகளின் உருவத்தையே சிதைத்து விட்டார்கள். அது மட்டுமின்றி, அவர்களது கைத்திறனையே வேதங்கள் போதிக்கும் உண்மை என்று மக்களை நம்பவும் வைத்து விட்டார்கள்.

இவ்வாறு, தர்மத்தையே சிதைத்து, அதன் உருவத்தையே மாற்றி விட்டனர் இறைவனின் விரோதிகள். சாதுக்களும் ரிஷிகளும் வேண்டிக்கொண்டதற் கிணங்க உலகத்தைச் சர்வநாசத்திலிருந்து காப்பாற்றவும், தர்மத்தை உத்தாரணம் செய்யவும் இறைவன் சித்தம் கொண்டார். இன்றைய குருட்டுத் தனத்தைப் போக்குவது யார் ? மனிதன் முதலில் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம்(வெறுப்பு)

ஆகிய அரிஷ்டவர்க்கம் என்னும் கொடிய வன விலங்கை வெட்டி வீழ்த்த வேண்டும். அப்பொழுது தான் தர்மத்தைக் காக்க முடியும்.

தர்மத்தை இறைவன் என்றும், வேதங்களை விஞ்ஞானம் என்றும் புத்தர் குறிப்பிடுவார். சோமகன் என்ற அசுரன், யார் யார் வேதங்களைப் படித்து அதன்படி நடக்கிறார்களோ அவர்களை ஒழித்துக்கட்டுவதையே பணியாக கொண்டிருந்தாரன். உயிருக்கு பயந்தவர்கள், அதைப் பின்பற்றத் தயங்கினார்கள். அதைப் போலவே புத்தர் காலத்திலும் வேதம் என்ற சொல்லையே மக்கள் விருப்பவில்லை. புத்தர் வேதங்களை இகழவில்லை. மாறாகப் போற்றிக் கொண்டாடினார். புத்தரை நாஸ்திகர் என்று சொல்லுகிறார்கள். புத்தர் நாத்திகர் என்றால் ஆஸ்திகர் என்பவர்தாம் யார் ? புத்தரின் வாழ்க்கை முழுவதும் அற்புதமான தர்மத்தின் கதையாகத்தான் இருந்தது. சங்கரர் தர்ம மார்க்கத்தையும், கர்ம மார்க்கத்தையும் எதிர்த்தார் என்று சொல்லுபவர்களும் இருக்கிறார்கள். தங்கள் மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்ள கர்மத்தையும், தர்மத்தையும் உபயோகப்படுத்திக் கொள்ளுவதைத் தான் சங்கரர் எதிர்த்தார். மூலாதாரமான உண்மையைப் புரியவைக்க வேண்டும் என்ற ஆவல் உந்த தர்ம, கர்ம மார்க்கங்களை மக்களுக்கு போதித்த மிகச் சிறந்த ஆசான் ஸ்ரீ சங்கரர்தான்.

தர்மத்தின் மேலும், கர்மத்தின் மேலும் சங்கரர் கொண்டிருந்த பற்று சத்தியத்தின் அடிப்படையில் எழுந்தது. வேதங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவைகளின் மேல் புத்தர் கொண்டிருந்த விசுவாசத்தை உயர்ந்த நோக்கமுள்ளவர்களால் தான் புரிந்து கொள்ள முடியும். மற்றவர்களால் அவரைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. உயரமான இடத்திற்கு ஏறிச் செல்லப் பயன்படுத்தப்படும் ஏணியும் உயரமாவதாகத்தானே இருக்க வேண்டும்.

அகங்காரத்தை அடக்கி, சுயநலத்தோடு கூடிய ஆசைகளை வென்று, மிருக உணர்வுகளை ஒழித்து. உடலே நான் என்று இயல்பாக எழும் நினைவுகளை உதறித்தள்ளி நடப்பவனை அறவ வழியில் செல்பவன் என்று உறுதியாகக் கூறலாம். அறவழியில் செல்லுவதன் நோக்கம் என்ன என்று

அவனுக்குத் தெரியும். அலைகள் கடலோடு ஐக்கியமாவதைப் போல, ஆத்மா பரமாத் மாவோடு ஐக்கியமாவதே அதன் நோக்கம்.

அன்றாடக் கடமைகளில் ஈடுபடும் போது சொத்து, சுகம் என்னும் மோகவலையில் அகப்பட்டுக் கொள்ளாதே. ஆத்மவின் குரலுக்கு எதிராக, மாறாகப் பிழைபுரியாதே. எப்பொழுதும் மனச்சாட்சியின் குரலுக்குப் பணியத் தயாராக இரு. அடுத்தவர்களின் வழியில் குறுக்கிடாதே. மின்னி, மனத்தைக் கவரும் எல்லாப் பொருள்களுக்கும் பின்னால் உள்ள உண்மையை, சத்தியத்தைப் புரிந்து கொள்ள, எப்பொழுதும் விழிப்புடன் இரு. இவைகளே மனிதனாகப் பிறந்தவன் கொள்ள வேண்டிய அறங்கள். 'சர்வம் கல்விதம் பிரஹ்ம' எல்லாம் பிரம்மம் மயம் என்று அறிவுறுத்துவது ஞானம். ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் அந்த ஞானாக்கனி அகங்காரம், ஆசாபாசங்கள், உலகப் பற்று ஆகிய அனைத்தையும் எரித்துச் சாம்பலாக்கிவிடும். அவைகள் அனைத்தும் விலகிய பின், இறைவனோடு ஐக்கியமாகி அந்த ஆனந்த பரவசத்தில் மயக்க நிலையை அடைந்து விடுவாய். அற வழியை மேற்கொள்ளுவதால் கிட்டும் பலன் இதுவே.

'அஞ்ஞானத்தையும், அகங்காரத்தையும் ஞானத்தின் பலி பீடத்தில் பலிகொடுத்து அங்கே தர்மத்தை ஸ்தாபி' என்பதே வேதங்கள் போதிக்கும் உண்மை. சுயநலமற்ற ஒவ்வொரு சிறு செயலும், ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்கியமாவதற்கான வழியைச் செப்பனிடுகிறது. அறத்தின் பாற்பட்ட ஒவ்வொரு செயலும், பார்வையை விரிவுபடுத்தி, இறைவன் எங்கும் நிறைந்தவன் என்ற உண்மையை தெளிவுபடுத்துகிறது. இப்படிப்பட்ட சிறுசிறு செயல்களாகிய சிற்றாறுகள் தெய்வீகம் என்னும் புனிதமான புண்ணிய நதியோடு கலந்து பாய்ந்து சென்று, வழியில் வரும் தடைகளை எல்லாம் உடைத்துக்கொண்டு கடந்து சென்று பிரம்மம் என்னும் கடலோடு கலக்கின்றன.

இந்தச் செயல்கள் ஒவ்வொன்றும், பிரபஞ்சம் முழுவதும் நிறைந்து நிற்கும் பரமாத்மாவுக்குச் செய்யப்படும் வழிபாடுடின் அம்சங்களே. பற்றுதலின்றி, தெய்வ சமர்ப்பணமாக செய்யப்படும் செயல்கள் அனைத்தும்தர்மத்தின் அங்கங்களே. அவைகளே பிரம்ம சாட்சாத்காரத்தை

நோக்கி அழைத்துச் செல்பவை. ஒவ்வொரு வினாடிப் பொழுதையும் சொல், செயல் ஆகியவைகளையும் இறைவனை நோக்கி முன்னேற உதவும் சாதனங்களாகப் பயன்படுத்திக் கொள்ளுவதுதான் பாரத மக்களின் வாழ்க்கை முறை.

பண்டைக்காலத்தில் இருந்து வழங்கப்படும், 'தர்மகர்மங்கள்' எனப்படும் வார்த்தையின் பொருளை அலசி ஆராயவேண்டும். ஆன்மிக அரங்கிலும் தனிச்சிறப்புடைய பொருள் பொதிந்த கலைப் பெயர்கள் பல உண்டு. அவைகளைத் தெளிவாக புரிந்து கொண்டால் தான் சாஸ்திரங்களின் அறிவுரைகளை உள்ளபடி உணரமுடியும். உதாரணமாக, பழங்காலத்தில் மக்கள் யாகங்கள் செய்வது வழக்கம். அந்த யாகத்தில் பிராணிகளைப் (பசு) பலி தருவது உண்டு. பிராணிகள் என்பது ஒரு சங்கேத மொழியே. வாயில்லாப் பிராணிகளைப் பலி தருவது நோக்கமல்ல. மனிதன் அவைகளின் வாழ்க்கையைத் தியாக குண்டத்தில் முடிக்க வேண்டுமென்பதில்லை. பிராணிகளே தியாக வாழ்வுதான் வாழ்கின்றன. ஆன்மிக மொழியில் பிராணி (பசு) என்றால் நான் என்ற உணர்வை, அகங்காரத்தைப் பலியிடுவது என்றே பொருள், இறைவனைப் பசுபதி என்றும் கோவிந்தன் என்றும் அழைப்பார்கள். பசுபதி என்றால் (பசு- ஜீவன்) எல்லா உயிர்களுக்கும் தலைவன் என்று பொருள். கோவிந்தன் என்றால் பசுக்களை (ஜீவன்களை) ரட்சிப்பவன் என்று பொருள். பசுக்களை மேய்த்தல் என்ற கண்ணனின் லீலை, அனைத்துயிர்களுக்கும் அவரே ரட்சகர் என்பதையே குறிக்கிறது.

இறைதத்துவங்களைப் போலவே சாஸ்திரங்களுக்கும் பல உட்கருத்துக்கள் உண்டு. அறவழி மேற் கொள்வதன் நோக்கமே ஒவ்வொரு ஆத்மாவும் வெளியுலகப் பற்றுதலைக் களைந்து, ஜீவாத்மா பரமாத்மாவுக்கும் இடையில் திரையாக நின்று உண்மையை பொய்யாகவும், பொய்மையை உண்மை யாகவும் மாற்றிக்காட்டும் மாயைக்கிழித்தெறிந்து, இறைவனோடு ஐக்கியமாகிவிட வேண்டும் என்பதுதான்.

இளைஞர்கள், முதியவர்கள் என்ற பாகுபாடின்றி, அனைவரும் இந்த உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டும். உதாரணத்துக்கு சிவன் கோயிலை எடுத்துக் கொள்ளலாம். லிங்கத்துக்கு நேர் எதிராக நந்தியின்

சிலையைக் காணலாம். நந்தி பரமசிவனின் வாகனம் என்றும், அதனால்தான் அந்த சிலை சிவன் கோயிலில் வைக்கப்பட்டிருக்கிறது என்றும் நீங்கள் சொல்லுவீர்கள். காளை அல்லது பசு ஜீவாத்மாவை உருவகப்படுத்துகிறது. லிங்கம் பரமாத்மாவை (உருவமற்ற பரம்பொருளை) உருவகப்படுத்துகிறது. சிவனுக்கும் நந்திக்கும் இடையில் (ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையில்) யாரும் வரக்கூடாது என்றும், சிவனை நந்தியின் இருகொம்புகளின் வழியாகத்தான் பார்க்க வேண்டும் என்றும் சிலர் சொல்லுவார்கள். வேறு வழியாகப் பார்த்தால் என்ன என்று கேட்டால், அப்படிப் பார்ப்பதுதான் சிறப்பு என்று பதில் வரும். உண்மை என்னவென்றால் ஜீவன் மூலமாகச் சிவனைப் பார்க்க வேண்டும். ஜீவனும் சிவனும் ஒருவரே என்பதுதான் அதன் கருத்து. நந்தியும், ஈஸ்வரனும் சேர்ந்து நந்திஸ்வரர் ஆகிறார்கள். தளைகளில் சிக்கித்தவிக்கும் போது அவன் நந்தி. தளைகளிலிருந்து விடுபடும் போது அவன் ஈஸ்வரன். நந்தீஸ்வரன். பசு (ஜீவன்) தன்னைப் பசுபதிக்கு அர்ப்பணிக்கும் போது அதனுடைய தனித் தன்மை களையப்படு கிறது அதுதான் உண்மையான யாகம். இந்த உண்மையை அனைவரும் மறந்து விட்டார்கள்.

இவ்வாறு சங்கேதப்பொருளுடைய செயல்கள் எல்லாம் அடையாளம் காண முடியாதபடி மாற்றப்பட்டுவிட்டன. தத்துவங்களுக்கும் செயல் முறைக்கும் இடையில் மிகப் பெரிய இடைவெளி தோன்றிவிட்டது. உலக வாழ்வில் மேற்கோள்ளும் சிறிய செயல்கள் கூட உயர்ந்த ஆன்மீக தத்துவங்கள் நிரம்பியதாக இருக்க வேண்டும். அப்படி நடந்து கொண்டால், சாதராண எளிய மக்கள் கூடப் படிப்படியாக லட்சியத்தை நோக்கி முன்னேற முடியும். செயல், அதன் நோக்கம் இவைகளின் வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ளாமல் தொடர்ந்து செய்துகொண்டே போனால், அது நகைப்புக்குரிய செய்கையாகி விடும்.

அகங்காரத்தை முற்றிலும் ஒழிப்பது மிகவும் சிரமமான செயல். அதனால்தான் மனிதன் வாயற்ற பிராணிகளைப் பலியாக தருகிறான். இந்த பிராணிகளை தருவது தமோகுணத்தின் அடையாளம், உலகப் பற்றில் அகப்பட்ட மனிதனின் வழியாகும் அது. அகங்காரம் என்னும் மிருகத்தைப்

பலிதருவது தான் சாத்விகயாகம் : அதுவே மீட்சிப்பாதை என்று சொல்லியிருக்கிறான் பிரகலாதன்.

இவ்வாறாக அந்நாளைய பரமார்த்தம் (உயர்ந்த லட்சியம்) இந்நாளில் பாமரார்த்தமாக (அறிவிலிகளின் நோக்கமாக) மாறி விட்டது. பொருள் நிறைந்த செயல்கள் இந்நாளில் அடையாளம் காண இயலாதவாறு உருமாறிவிட்டன. ஆசார அநுஷ்டானங்கள் எனப்படும் மரத்தின் கிளைகள் ஒழுங்கற்ற முறையில் வளர்ந்து அதன் தோற்றத்தையே பயங்கரமாக மாற்றிவிட்டன. ஆனால் அதற்காக மரத்தை வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டு, வேறு ஒரு புதிய மரத்தை நடமுடியாது. இப்பொழுது இருக்கும் மரத்தையே கண்டபடி வளர்ந்துவிட்ட கிளைகளை வெட்டி ஒழுங்குபடுத்த வேண்டும்; நேராக வளரும்படிச் செய்ய வேண்டும். உயர்ந்த நோக்கங்களை மறக்கக் கூடாது; இழிவான நிலைக்கு அவைகளைத் தாழ்த்தக் கூடாது.